சுருக்கம்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் – செங்கல்பட்டு, தென்காசி, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய 6 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சத்துணவு திட்ட செயலாக்கத்திற்கென புதிதாகப் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது– மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சஉதி), உதவி கணக்கு அலுவலர் மற்றும் உதவியாளர் பதவிகளுக்கு 01.09.2025 முதல் 31.08.2028 வரை மூன்றாண்டுகளுக்கு பணித் தொடராணை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (ச ந 4–2) துறை**

அரசாணை (ப) எண்.299

நாள் 01.12.2025
திருவள்ளுவர் ஆண்டு 2056
விசுவாவசு, கார்த்திகை 15

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண். 55, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந 4–1) துறை, நாள் 30.08.2024.
2. சமூக நல இயக்குநர் அவர்களின் கடித ந.க. எண்.175/சஉதி1 (2)/2024, நாள் 06.10.2025.

------

ஆணை:–

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள செங்கல்பட்டு, தென்காசி, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய ஆறு மாவட்டங்களில், சத்துணவுத் திட்ட செயலாக்கத்திற்கென ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (ச.உ,தி), உதவி கணக்கு அலுவலர், உதவியாளர், அலுவலக உதவியாளர், தகவல் தொகுப்பாளர் மற்றும் கணினி உதவியாளர் ஆகிய பணியிடங்கள் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டும், அம்மாவட்டங்களுக்கு நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், சமூக நல இயக்குநர் அவர்கள், புதியதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள செங்கல்பட்டு, தென்காசி. கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய 6 மாவட்டங்களில் தற்காலிகமாகத் தோற்றுவிக்கப்பட்ட பதவிகளான மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சஉதி), உதவி கணக்கு அலுவலர் மற்றும் உதவியாளர் பணியிடங்களின் பணித் தொடராணை கடந்த 30.08.2025 அன்றுடன் முடிவடைந்த நிலையில், மேற்குறிப்பிட்ட பணியிடங்களுக்கு

த.பி.பா.,

01.09.2025 முதல் 31.08,2028 வரை மூன்றாண்டுகளுக்கு பணித் தொடராணை வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. சமூக நல இயக்குநரின் கருத்துருவை கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று, செங்கல்பட்டு, தென்காசி, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய 6 மாவட்டங்களில் புதியதாகத் தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட பதவிகளுள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (ச.உ.தி) (நிலை 22, ரூ.56100–ரூ.205700), உதவி கணக்கு அலுவலர் (நிலை 20, ரூ.37700– ரூ.138500) மற்றும் உதவியாளர் (நிலை 10, ரூ.20600–ரூ.75900) ஆகிய பதவிகளுக்கு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 3 பணியிடங்கள் வீதம் மொத்தம் 18 பணியிடங்களுக்கு 01.09.2025 முதல் 31.08.2028 வரை மூன்றாண்டுகளுக்கு பணித் தொடராணை வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:–

> "2236– சத்துணவு –02– சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் – 102– மதிய உணவு – மாநிலச் செலவினங்கள்– AR – கிராமப் பகுதிகளில் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தை செயல்படுத்தும் பணியாளர்கள் – தொடரும் செலவினம் –301 சம்பளங்கள்"

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.12142192/நிதித்துறை/2025, நாள் 24.11.2025 பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெயஸ்ரீ முரளீதரன்
அரசு செயலாளர்

பெறுநர்
சமூக நல இயக்குநர், சென்னை–05.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள். (சமூக நல இயக்குநர் வழியாக)
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–18.
மாவட்ட கருவூல அலுவலர்கள், (செங்கல்பட்டு, தென்காசி, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை)

நகல்
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலன் – மகளிர் உரிமை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, சென்னை–9.
நிதித் (ச.ந.) துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஜெ.எ.ஜெஸ்லின் ரஞ்சனி
01.12.2025

பிரிவு அலுவலர்
1/12/25